www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 037
14 செப்டம்பர் 2010
தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# 'கே.பியுடன் இணைந்து நாம் வேலை செய்கின்றோம்!' ரெஜியின் சகபாடி டொக்டர் புவி ஒப்புதல் வாக்குமூலம்!!



சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்தை கொழும்பில் இருந்தவாறு நெறிப்படுத்தி வரும் கே.பி என்றழைக்கப்படும் தம்பியையா செல்வராஜா பத்மநாதனுடன் இணைந்து தாங்கள் செயற்படுவதாக, கே.பி.ரெஜியின் சகபாடியான டொக்டர் புவி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பிரித்தானியாவில் வசித்து வரும் டொக்டர் புவி, வன்னியில் மருத்துவராகக் கடமையாற்றிய பின்னர், ஜெயசிக்குறு நடவடிக்கையை தொடர்ந்து அங்கிருந்து வெளியேறி 1997ஆம் ஆண்டு இலண்டனை வந்தடைந்தார். இலண்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கிய உறுப்பினராக செயற்பட்ட டொக்டர் புவி, பின்னர் கே.பி.ரெஜியுடன் ஏற்படுத்தப்பட்ட உறவுகளை தொடர்ந்து தமிழர் நலவாழ்வுக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கி, பேர்மிங்காமில் உள்ள டொக்டர் சச்சி போன்றோரின் உதவியுடம் இயங்கி வந்தார்.

இதன் பின்னர் கே.பி.ரெஜியின் வலது கையாக மாறிய டொக்டர் புவி, 2008ஆம் ஆண்டின் இறுதியில் கண்ணீர் வெள்ளம் என்ற செயற்திட்டத்தின் கீழ் பிரித்தானியாவில் மனிதநேய செயற்பாட்டாளர்களால் திரட்டப்பட்ட நிதியைக் கையாடியிருந்தார். இது தொடர்பாக இவருக்கு எதிராக வன்னியில் விசாரணைகள் தொடங்கப்பட்டு, இறுதிப் போர் உக்கிரமடைந்ததை தொடர்ந்து அவை இடைநிறுத்தப்பட்டிருந்தன.

மே 18இற்குப் பின்னர் கே.பி.ரெஜியின் பணிப்புரைக்கு அமைய அடிக்கடி மலேசியா சென்று கே.பியை சந்தித்து வந்த இவர், பிரித்தானிய தமிழர் பேரவைக்குள் பல்வேறு குழப்பங்களை விளைவித்து வந்தார். கே.பி.ரெஜி சிங்கள அரசிடம் சரணடைந்ததை தொடர்ந்து, அறிவழகன் என்றழைக்கப்படும் வி(நாய்)யகத்துடன் தொடர்புகளைப் பேணி வந்த டொக்டர் புவி, வி(நாய்) யகத்தின் ஆலோசனைக்கு அமைய, கே.பி.ரெஜியின் பணிப்புரையை ஏற்று கடந்த மே மாதம் கொழும்பு சென்று கே.பியையும், கோத்தபாயவையும் சந்தித்து, பின்னர் அவுஸ்திரேலியா சென்று, அங்கிருந்து மீண்டும் இலண்டனை வந்தடைந்தார்.

இவரைத் தொடர்ந்து கனடாவில் உள்ள கே.பியின் நிதிப் பொறுப்பாளர் பே.இன்பநாயகம் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழுவொன்று கொழும்பு சென்று கே.பியை சந்தித்துத் திரும்பியிருந்தது.

டொக்டர் புவியின் கொழும்புப் பயணம் தொடர்பான செய்திகள் தமிழ் ஊடகங்களில் வெளிவராத பொழுதும், இது தொடர்பான செய்திகளை நாம் வெளிப்படுத்தியிருந்தோம்.

இந்திய உளவுப் பிரிவினரின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கே.பி.ரெஜி செயற்படுவது எம்மால் கண்டுபிடிக்கப்பட்டு, ஒலிப்பதிவு ஆதாரத்துடன் அம்பலப்படுத்தப்பட்ட நிலையில், டொக்டர் புவியின் தொலைபேசி உரையாடல்களை எமது ஊடகப் புலனாய்வாளர்கள் ஒட்டுக்கேட்டு வந்தனர்.

இந்நிலையில் கிழட்டுஓநாய் சீவரத்தினத்திற்கும், டொக்டர் புவிக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடல் ஒன்றில், கே.பியுடன் இணைந்து தாம் செயற்படுவதை டொக்டர் புவி ஒப்புக் கொள்கின்றார்.

ரூட்டிங் முத்துமாரி அம்மன் ஆலயம், வெம்பிளி நடராஜர் கோவில் ஆகியவற்றில் திரட்டப்படும் நிதியை தன்னிடம் தந்தால், அதனை தமது வங்கிக் கணக்கு ஊடாக கே.பியிற்கு தன்னால் அனுப்பி வைக்க முடியும் என்றும் கிழட்டுஓநாய் சீவரத்தினத்திடம் டொக்டர் புவி கூறுகின்றார்.

'போராட்டம் நடந்தது: ஒரு தோல்வியில நிக்கிறன்' என்று கூறும் டொக்டர் புவி, கே.பியின் நிலைமையை அறிவதற்காகவே தான் கொழும்புக்கு சென்றதாகவும், தன் போன்றவர்களை வழிநடத்துவதற்கு கே.பி முன்வரும் பொழுது, அவரது தலைமையை ஏற்றுத் தான் செயற்படாமல் இருக்க முடியாது என்றும், கிழட்டுஓநாய் சீவரத்தினத் திடம் குறிப்பிடுகின்றார்.

இத்துடன் டொக்டர் புவியின் தொலைபேசி உரையாடலின் ஒலிவடிவத்தை உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக இணைத்துள்ளோம். இவர் தொடர்பாக மிகவும் அவதானமாக இருக்குமாறு அனைவரையும் நாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிங்கள அரசுக்கு நிதி அனுப்புவதற்கு கிழட்டுஓநாய் சீவரத்தினம் - அடிதடி அமைச்சர் சேகர் திட்டம்!



மாவீரர்களைத் தூற்றி அவர்களின் பெயரில் நிதி திரட்டி வரும் கிழட்டுஓநாய் சீவரத்தினம், நரிகேசி உருத்திரகுமாரனின் அடிதடி அமைச்சர் சேகர் ஆகியோர், கே.பியூடாக சிங்கள அரசுக்கு பெரும் தொகையில் நிதியனுப்புவதற்கு திட்டமிட்டிருப்பதாக கறுப்பிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

ஈஸ்ற்ஹாம் கத்தரின் வீதியில் அமைந்திருந்த தேசியச் சொத்தைக் கையகப்படுத்தி, ஐந்து இலட்சம் பவுண்களைத் திருடிய அடிதடி அமைச்சர் சேகர், கிழட்டுஓநாய் சீவரத்தினத்துடன் இணைந்து பிரித்தானியாவில் பல்வேறு குழப்பங்களை விளைவித்து வருகின்றார்.

தற்பொழுது இந்த ஐந்து இலட்சம் பவுண்களில் ஒரு தொகையை கே.பி.ரெஜி, டொக்டர் புவி போன்றோரின் உதவியுடன் கே.பியிடம் அனுப்பி சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதியுதவி புரிவதற்கு கிழட்டுஓநாய் சீவரத்தினமும், அடிதடி அமைச்சர் சேகரும் திட்டமிட்டிருப்பதாக கறுப்பின் ஊடகப் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு வரும் எமது ஊடகப் புலனாய்வாளர்கள், இது தொடர்பான ஆதாரங்களை விரைவில் எம்மிடம் கையளிப்பதற்கு உறுதியளித்துள்ளனர்.

## அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலிக்குள் நடப்பது என்ன?

நிதி நெருக்கடியால் தள்ளாடும் அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலிக்குள் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவதாக கறுப்பிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன. கே.பி குழுவை சேர்ந்த அன்ரன் பொன்ராஜாவின் ஆசானாக விளங்கும் ஏ.சீ.தாசீசியஸ் என்றழைக்கப்படும் அல்போன்ஸ் குமரன் தாசீசியஸ் அவர்களால் தொடங்கப்பட்ட அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியில் கடந்த சில மாதங்களாக காகிதப் புலி இராமு.சுபனின் ஆதிக்கம் அதிகரித்திருப்பதாக தெரிய வருகின்றது. இதற்கிடையே கறுப்பில் அடுத்ததாக தன்னைப் பற்றி எழுதப்படும் அபாயம் நிலவுவதாகவும், தனது தொலைபேசி உரையாடல்கள் கறுப்பின் ஊடகப் புலனாய்வாளர்களால் ஒட்டுக்கேட்கப்படலாம் என்றும், கடந்த வாரம் தனது நண்பர் ஒருவரிடம் ஏ.சீ.தாசீசியஸ் கூறியதாக எமது ஊடகப் புலனாய்




வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதற்குப் பதிலளித்த ஏ.சீ.தாசீசியசின் நண்பர், "மடியில் பாரம் உள்ளவனுக்குத்தான் வழியில் பயம். உமது மடியில் என்ன கனம் உள்ளது?" என்று அவரிடம் கேட்டதாக தெரிய வருகின்றது. எது எவ்வாறிருப்பினும், அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியில் நிகழ்ந்தேறும் முறைகேடுகளை கண்காணிப்பதற்காக எமது ஊடகப் புலனாய்வாளர் ஒருவரை வானொலிக்குள் நாம் களமிறக்கியுள்ளோம். ஒரு தொழில்நுட்பக் கலைஞராக அங்கு கடமையாற்றி வரும் அவர் ஊடாக, விரைவில் எமக்குப் பல ஆதாரங்கள் கிடைக்கும் என்பதை உலகத் தமிழ் உறவுகளுக்கு முற்கூட்டியே தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.



# கே.பியின் நிதிதிரட்டல் நிகழ்வை புறக்கணியுங்கள்!






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்